# மொரட்டுவைப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பொருத்தமான தகைமை பெற்று பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தரமான பதவியில் உள்ள ஊழியர்களிடம் மட்டும் இருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்களுடன் (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு) உரிய நிறுவனத்தின் செயலாளர் / பதிவாளர் / முதல்வர் / பணிப்பாளர் ஊடாக மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உதவிப்பதிவாளர் / தாபனக்கிளை (கல்விசாரா) பிரிவிற்கு 14.10.2026 திகதிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

### 01. தொழிற்திறன் செய்முறை விளக்குநர் பதவி (மின்சாரக் கம்பியிடல் வரைபடங்கள் மற்றும் நிர்மாணம்)

**தகைமைகள்:**

(i) (a)பின்வரும் துறைகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்:
மின்சாரக் கம்பியிடல் வரைபடங்கள் மற்றும் நிர்மாணம்,
மின்சார மோட்டார் சுருளமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல்;

மற்றும்

(b)பல்கலைக்கழக/அரச சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் திறன்சார் மின்னியலாளர் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

(ii)மேலே (i)(a) இல் குறிப்பிடப்பட்டுள்ள துறையொன்றில் பல்கலைக்கழக/அரச சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் திறன்சார் விசேட தரப் பதவியில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: U-MN 1 (III) – ரூ. 49,475 – 17 × 540 – 58,655/-
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025 (i) ஆகியவற்றுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**தெரிவு செய்யும் முறை:** செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்.

**குறிப்பு:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கைக் கடிதம் இல. 06/2020 இன் நிபந்தனைகளின்படி, பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கான நியமனமாகும் சந்தர்ப்பத்தில், அரச தாபனக்கோவையின் அத்தியாயம் VII, பிரிவு 09 இற்கமைய உரிய சம்பளப்படி நிலையில் அமர்த்தப்படுவர்.

ஒப்பமிடப்பட்டது
**பதிவாளர்**
**மொரட்டுவைப் பல்கலைக்கழகம்**
**23.09.2026**